# இதுதான் மகாமகம்!



15
05
T. 18715

தந்தை பெரியார்

மற்றும் 1945-ல் எழுதியது)

-திராவிடர் கழக வெளியீடு, நன்கோடை - 150 காசுகள்

# மகாமகம்

மகாமகம அல்லது மாமாங்கம் என்பதாக ஒரு பெரிய திருவிழா அடுதத மாதம் (மாாச்சு மாதம) 10-ந் தேதியில் கும்பகோணததில நடத்த ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகினறது சுமார் ஒரு லட்சம் ஜனங்களுக்கு மேலாகவே வந்து கூடுவார்கள் என்று கணக்கிடப்பட்டு, ரயில்வேககாரர்கள் பல பிளாட்பாரங்களையும, கொட்டகைகளையும போடுகிறார்கள் அதறகுத் தகுந்தபடி கூட்டங்களை வரவழைக்க அநேகவித சிததிரபபடங்களை அசசடித்து ரயிலவே ஸ்டேஷன்களின மேடைகளில் எல்லாம் கட்டித தொஙகவிட்டும, பத்திரிகைகளுககுப் பணஙகொடுததுப பிரசுரிககும்படி செய்தும, மறறும் பல வழிகளிலும விளம்பரம செயகிறார்கள்

சாதாரணமாகக் கும்பகோணமானது ஒரு அழகான பட்டணமெனறோ, வேறு ஏதாவது ஒரு வழியில் மக்கள் அறிவுக்கோ, தொழிலுக்கோ, பயன்படுத்தத் தகுந்த விசேஷம் பொருநதிய பட்டணமென்றோ யாரும் சொல்லி விட முடியாது அது ஒரு புராதனமான பட்டணம் என்பதோடு நாளுக்கு நாள் க்ஷீணதிசை அடைந்துவரும் தோற்றமுடைய பழங்கால முறைக் கட்டடஙகளையும்

உடைய ஊராகும அதில வசிககும மக்களோ பெரும் பாலோா பாாப்பனாகளும், "மேல்ஜாதி" மிராசுதாரர் களுமாகும

## கும்பகோணம் - பார்ப்பனர்கள்

கும பகோணம பார்பபனர்கள எனறால மிக தந்திர சாலிகள் என்பார்கள் கும்பகோணம் மாத்திரமல்ல, தஞ்சாவூா ஜிலலா முழுவதுமே உள்ள பார்பபனாகள் பணழய ராஜாவின தாமசததிரததினாலும, மற்றும் தஞ்சை ஜிலலாவிலேயே ஏறபட்டிருநத இரண்டு முதல்தர காலேஜினாலும சாபபாடும் கல்வியும சுலபமாய, இருக்கும் இடததிலேயே கிடைககக கூடிய நிலைமை இருந்ததால படிததுப பட்டம பெறவும, அதற்கேற்ற உததியோகங்கள் பெறவும சவுகரியம ஏறபட்டு இநத மாகாணத்தில் அவர் களே முககியமானவாகளாய இருநது வநதிருக்கிறார்கள்

சுமாா 25 வருஷஙகளுக்கு முன் தமிழ்நாடு மாத்திரமல்ல சென்னை மாகாண முழுவதிலும் தஞ்சை ஜிலலா பார்ப் பனாகளே திவானகளாகவும, பிரபல வககீல்களாகவும், முன்சீப், ஜட்ஜி, டிப்டி கலெகடர், போலீஸ் இன்ஸ்பெக் டர், சூபபிரணடுகளாகவும் மறறும் பல பெரிய பதவி உடையவர்களாகவும் நோநது பிரபலமாகிவிடடார்கள இநதககாரணஙகளால் குமபகோண பாாப்பனாகளுக்கு அதிகமான விளமபரம ஏற்பட வசதியாகிவிட்டது அங் குளள மிராசுதாராகளும் ஏறக்குறைய பாாபபனாகளை காபபியடிதது தஙகளையும் மேல்ஜாதிககாராகள என்று விளம்பரப்படுததிககொளவதோடு நினறுவிட்டார்களே தவிர, கல்வியில் அவர்களுடன் போடடி போடவோ, உத்தியோகம பெறவோ முடியாதபடி பார்பபனர்கள் செயதுவநத சூழசசியை வென்று முனனேற முடியவில்லை

ஆதலால் பணம சேர்ப்பதிலும், பூமியை பெருக்குவதிலும் மாததிரம் கவலைகொணடு ஆள் ஒன்றுக்கு *1000* வேலி *2000* வேலி என்பதாக நிலத்தை பெருக்கிக் கொண்டார்கள இரணடு கூட்டமும சிறிதாவது சரீரத்தினால் உழைக்காமல, ஏழைகள, உழைபபாளிகள் ஆகியவர்களின் பாட்டினாலேயே வாழ்நது வருகிறாாகள் இதைத்தவிர மறறபடி அந்த ஜிலலாவுககும குமபகோணத்துக்கும வேறு உணமையான யோககியதை ஒனறும கிடையாது

## தஞ்சை மாவட்டத்தில் ஸ்தல புராணம்

ஆனால மறறொரு யோககியதையும உணடு, அது மேறசொனனவைகளைவிட மிகவும் மோசமான யோககியதையேயாகும் அதெனனவெனறால தஞசை ஜிலலாவிலுளள ஒவவொரு கிராமமும ஒவ்வொரு விசேஷ ஸ்தலங்களாகும் பாடல பெறற ஸதலஙகளாகவும, பூலோக வைகுணடமாகவும, பூலோக சுவாககமாகவும், மற்றும இநதியாவில உளள முககிய புணணியடசேதததிரங்கள, புணணிய தீாததஙகள, புணணிய மூாததஙகள் என பவைகள எலலாம தஞசை ஜிலலாவிலேயே ஒவவொரு கிராமதத்தில் ஒவவொனறு பிரதிபலிபபதாக கதைகளும, புராணஙகளும, காண பரமபரை விசேஷஙகளும உணடு

தஞசாவூா ஜிலலாககாராாகள படிததுவிட்டு வெளியிடஙகளுககுச சென்று அஙகாஙகுள்ள செல்வஙகளை கொளளைகொணடு போய சோபபது ஒனறு, கிராமஙகள தோறும, புணணியடசேதத்திரஙகளும, பாடலபெறறடசேதத்திரஙகளுமாய இருபபதால மறற ஊாகளில இருககும மூடாகள எலலாம பாடுபட்டுத தேடிய பணஙகளை மூட்டை கட்டிக கொணடுபோய அந்த ஜிலலாவில் அழுதுவிட்டு வரும மடததனம இரணடு, ஆகிய

இவைகளால மாததிரமலலாமல, மைசூர், குடகு தேசத்தில் இருநதுவரும காவேரியானது சேலம் கோயமுத்தூர் ஜிலலா வழியாக வநதாலும் சேலம ஜில்லாக்காரர்களுககு குடிபபதறகுககூட மாாக்கமிலலாமல் செயதுவிட்டும், கோயமுததூா ஜிலலாககாரருக்கு ஒரு செண்டு பூமிகூட பயிராவதறகு உதவாமல்படி ஏமாற்றிவிட்டு எல்லா தணணீரும நேரே தஞசை ஜில்லா சென்று ஜனங்கள் வெளிககு போவதறகுக்கூட இடமிலலாமல எல்லா நிலமும் நஞ்சை பயிராகும்படியும செய்துகொண்ட சூழ்ச்சியால் ஏறபட்ட லாபமும மூன்று இந்தப்படியாக "இயற்கை" வளமபெறற தஞசை ஜிலலாவுககு மகாமக விசேஷம எனனும ஒரு புரட்டு யோகமும் சோவதில அதிசய மொனறுமிலலை ஆனால, இபபோது நாம் இதை ஏன எடுத்துககாட்ட வருகிறோம எனறால, நமது மககள் இததனை காலமதான மூடர்களாய், மடையர்களாய், கடையாகளாய இருநது இவவிதப புரட்டுகளுக்கும், சூழசசிகளுக்கும ஆளாகி நஷ்டமும், கஷ்டமும், இழிவும், ஏமாறறமும அடைநது வந்தோம எனறாலும இனியும பாரமபரியமாய் தலைமுறை தலைமுறையாய் அடைய வேணடுமா எனபதை ஞாபகப்படுததவே இதை எழுதுகிறோம

## மகாமக அற்புதம்!

தோழர்களே!

மகாமகம என்றால என்ன? எனபதை சறறு விசாரித்துப் பாருங்கள் இதை அறிவதற்காக நாம் ஆவல்பட்டு தேடினோம, கும்பகோண ஸதலபுராணம என்பதில் இருப்பதாக அறிநதோம, அதை வரவழைததுப் பார்த்தோம் அதில் உள்ளதை வெளியிடுகின்றோம.

"கஙகை, யமுனை, சரஸ்வதி, நாமதை, காவேரி, சிநது, கோதாவரி, சரயி, தாமிரபரணி ஆகிய ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னிகைகளாக வெளிவந்து வெள்ளியஙகிரிககுச் சென று பரமசிவனை அடைநது "உலகத்தில உள்ள மக்கள எல்லோரும் எவவளவோ கொடியதாகிய பாவஙகளைச் செய்துவிட்டு எங்களிடததில் வநது ஸநானம செயது அவர்களது பாவங்களை எஙகளுககு கொடுதது தீாததுககொணடு போயவிடுகிறாாகள அநதப பாவஙகளையெலலாம் பெறறுக்கொண்ட நாங்கள எபபடி அவைகளை போககிககொள்ளுவது" என்று கேட்டாாகள அதறகு பரமசிவனாா, "கும்பகோணததிலே, தென்கிழககிலே ஒரு தீர்த்தம, உணடு 12 வருஷததுககு ஒருமுறை மாசிமாதம் மகாமகம நாளனறு அதில குளிபபீாகளானால உஙகள பாவங்கள் தொலைந்து போகும" என்று சொனனாா அதற்கு 9 கன்னிகைகளும் "கும்பகோணம எஙகே இருககின்றது" என்று கேட்டாாகள் அதறகு பரமசிவனார் அநத 9 கனனிகைகளையும் பார்த்து "நீஙகள காசிக்குப் போயிருஙகள, அஙகிருநது நான் விஸ்வேஸவரன் என்னும் பெயருடன உங்களை கும்பகோணத்திற்கு அழைததுப போகிறேன" எனறு சொனனாா அந்தப்படியே கனனிகைகள காசிக்குப போயிருநதாாகள் பரமசிவனார் அவர்களை காசியிலிருநது கும்பகோணத்துக்கு அழைத்துச சென று மகாமக குளததைக காட்டி குளிக்க வைத்தார் பிறகு சிவபெருமானும அந்தக கன்னிகைகளும குமபகோணத்தி லேயே கோவிலகொண்டுவிட்டனர்" ஆதலால் இதில் அநதக காலததில் குளிததவாகளுக்கு சாவ பாவமும

துலைநது சாவ மஙகளமும உணடாகும" என்று கணடிருககினறது

## மடையர்கள் என்றால் கோபமேன்?

தோழாகளே!

இதுதான கும்பகோண ஸதல மகத்துவமும், தீர்த்த மகததுவமும, கோயில மகததுவமும் ஆகும இதற்கு அபபுறம அநதக குளத்தில எபபடிக குளிபபது, அதறகாக பாாபபனாகளுககும பாாபபனப பெணகளுக்கும் எப்படி, எவவளவு பணம கொடுக்கவேணடியது என்கின்ற விஷயஙகளும, எநதெநத இடததில குளிப்பது, எநதெந்த சாமியை எப்படி எபபடிக கும்பிடுவது என்கினற விஷயமும இருககினறது

இநதக கதையை ஆதாரமாக வைத்த இந்த மகாமக உறசவததிறகாக எவவளவு ஆாப்பாட்டஙகள, எவ்வளவு விளமபரஙகள, எவவளவு பணசசெலவுகள, எவ்வளவு கஷடஙகள் எனபதை யோசித்துப பாருங்கள் இநதுககள் மடையாகள, அஞ்ஞானிகள, மூடர்கள், எனறு ஒருவன சொனனால உடனே கோபப்பட்டு கொளளததான் கற்றுக்கொடுககபபட்டு இருககினறோமே அலலாமல அறிவைக கொணடு பாாககினறோமா?

இநதக் கும்பகோணததுக்கும, அஙகுள்ள மாமாங்கக குளததிறகும உள்ள அனேக சாககடைகளிலும், பட்டிக காடுகளிலும, குபபை மேடுகளிலும உளள குழவிக் கலலுகளுககும, நீரோடைகளுககும, குளங்களுககும குட்டைகளுககு மெலலாம் புராணஙகளும கதை ஆதாரஙகளும அயதீகஙகளும இருநது வருகினறன பொதுவாக இது போனற எநதக்காரியங்களுககும விசேஷம எனபதெலலாம

இரண்டே இரண்டு வாக்சியங்களில்தான் அடங்கி இருக்கின்றன அதாவது,

1 சாவ பாபஙகளும நிவாத்தியாகிவிடும்

2 வேண்டியதெல்லாம் அடையலாம, என்கின்றவை களேயாகும

இநத இரணடு காரியமும யோக்கியமான காரிய மாயிருக்குமா? எனபதை யோசித்துப பாருஙகள்

## மனிதன் செய்த பாவம் போகுமா?

மனிதன செயகின்ற பாவமெலலாம இந்த மாதிரியான காரியஙகளால தீர்ந்து போவதாயிருநதால, உலகததில எந்த மனிதனாவது பாவகாரியங்களைச செயயததவறு வானா? தயங்குவானா? என்று யோசித்துப் பாருங்கள

மனிதனுக்கு வேண்டிய அவன் ஆசைப்படுமபடியான காரியங்கள் எல்லாம இநத மாதிரியான சிறு காரியங களால் கைகூடிவிடுவதாய இருநதால் மனிதனுடைய முயறசி, நடததை ஒழுககம் என்பவைகளுக்கெல்லாம அவசியமும, நிபநதனையும், வரையறையும் எதறகாக வேணடும் எனபதையும் சிந்தித்துப் பாருங்கள

நிற்க, பாவமுளள மனிதாகள நதிகளில ஸநானம் செயததால நதிகளுக்கு அந்தப் பாவங்கள் ஒட்டிக் கொண் டது எனபதில ஏதாவது அறிவோ, உண்மையோ இருக்க முடியுமா? அநத நதிகள் அநதப பாவத்தை தொலைகக மறறொரு தீர்த்தத்தில போய் குளிப்பது எனறு மகாமக தீாததத்துக்கு வநது குளிபபதானால் இதில் ஏதாவது புத்தி இருககின்றதா? நாணயம இருககினறதா? என்று யோசிததுப்பாருங்கள் இத்தனை பாவஙகளையும் ஏறறுக் கொணட மகாமக தெபபககுளம் அதன் பாவத்தைத தீர்கக

எந்த உருவெடுதது எநதக குளததில போய குளிபபது எனபதையும, பிறகு அந்தகுளம வேறு எநதக்குளத்துக்குப் போய் பாவததைத தீாத்துககொளளும என்பதையும யோசிததால கடுகளவு அறிவுளளவனாவது இதை ஏற்க முடியுமா எனறு பாருஙகள இதையெலலாம கவனித்தால் மததத்தின பேரால், பாவபுணணியததின பேரால, கடவுள பேரால, தீாததம, ஸதலம், மூாததி எனனும் பெயர்களால், மககள எவவளவு தூரம ஏயககபபடடு, கடையாகள, மடையாகள ஆககப்படுகினறார்கள எனபதையும சிநதிததுப பாருங்கள

மறறும, அநதப புராணததிலேயே இநத மகாமக குளத்துக்குள வடககு பாகததில் 7 தீாததங்கள் இருப்பதாகவும், கிழககு பாகததில 4 தீர்த்தஙகள இருப்பதாகவும நடுமத்தியில (66,00,00,000) அறுபததியாறு கோடி தீாததம் இருபபதாகவும இநத மகாமக குளத்தில முழுகினால இததனை தீாதததிலும ஸநானம செயத புணணியம கிடைககுமெனறும எழுதி, அநதப்படி ஒரு சித்திரமும வரையபபடடிருக்கினறது இது எவவளவு பரிகசிக்கத்தக்க விஷயம எனறு பாருங்கள் இதை எழுதினவன எவவளவு அயோககியன அலலது எவவளவு மூடன என்பதலல இபபோதைய நமது கேள்வி மறறெனனவென்றால இதைப்படிததுப பார்தது இதன்படி நடபபார்கள எனறு நமபிய மககளை இவன் எவவ்ளவு முட்டாளாகவும், அடிவண்டலாகவும் கருதி இருககவேணடும் என்பதுதான் நமது கேளவியாகும்

## தேங்கிய நீர் தீர்த்தமா?

தீாத்தம் எனறாலும, நதி எனறாலும், குளம் என்றாலும் எனன என்பதை சற்று சிநதித்துபபாருங்கள். நதி எனறால்

மழை பெயவதால் ஏற்படும் வெள்ளங்கள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும் ஓடை அல்லது நீர்பபோககாகும்

குளம என்றால் இந்துமாதிரி ஓடையில் இருந்து வழிவைதது தண்ணீர் நிரப்புவதோ அல்லது மழை வெள்ளததால ஊரில் உள்ள அசுத்தங்களையும், கசுமாலஙகளையும அடிததுக்கொண்டு வந்து குளத்தில் விழுந்து தேஙகியிருபபதேதான மற்ற இட்டித் தீரததஙகள் என்பதும் கிணற்றுக்குள் நீா ஊற்றம்போன்ற ஊற்றேயா-கும இந்தத தணணீர்களுக்கு எல்லாம் அந்தந்த இடததை அனுசரித்த குணஙகளேதான் உண்டு மறறபடி அவற்றில் ஒரு மனிதன செய்யும பாவம் என்பதைப் போக்கவோ, அவன ஆசைப்படடதைக கொடுககவோ ஆன சகதிகள் எபபடி இருகககூடும் எனபது ஒரு மனிதனுககு தெரியாதா என றுதான் கேடகின்றோம

## மாமாங்கக் குளம் என்றால் என்ன?

மாமாஙகக குளம என்பது மேலகண்ட மாதிரியான ஒரு சாதாரண தெபபககுளம் மகாமக சம்யத்தில அதில் உளள தணணீா அவவளவையும இறைத்துவிட்டு வெறும் அடி வணடலையும, சேறறையும் மாததிரம் மீதி வைதது அதிலும் கநதகபபொடியைக் கலககிவிடுவார்கள் அந்த சேறானது கறுபபுக களிமணபோல இருககும் அந்தக் குளததின் விஸதீரணமோ சுமார் 500 அடி சதுரம் இருக்கலாம் அடி மடடம சுமாா 200 அடி சதுரம இருக்கலாம இதில லடசம் போகள குளிபபது என்றால எபபடி சாத்தியமாகும் அந்தக் குளததில இறஙகி அந்த சேறறில் கொஞசம் எடுத்துச் சரீரத்தில பூசிக்கொள்ள வேண்டியதுதான் பிறகு இந்த அசிங்கியம போவதற்கு வேறு குளத்தில

குளிக்கவேணடியது தான் இதுதான வழக்கமாம ஒரு கிறிஸதவரோ, ஒரு மகமதியரோ இநதபபடி செயதால், அதை நாம பாாககு நோநதால அபபோது நாம் எனன எனறு சொலலுவோம்

மிஸ மேயோ நமது பழக்க வழககங்களைப் பறறியும, சடஙகுகளைப பறறியும, தீாத்தஙகளைப பறறியும எழுதியதைப பாாதது கோபிததுக்கொணடோம ஆனால இநத மாதிரி சேறறில் குளிப்பதால நாம் செயத பாவஙகள எலலாம தீர்ந்துவிடும எனறு கருதி இருக்கிற முடடாள்தனமான பேராசைககாக நாம் வெடகபபடு வதிலலை எனறால பிறகு எநதவிதததில நாம் அறிவாளிகள், யோக்கியாகள, மனிதத தன்மையுடையவாகள எனறு யோசிததுப்பாருஙகள் இந்த மாமாங்கத்தால் எததனை லட்ச ரூபாய ரயில் காரன கொளளை அடிககபபோகிறான்? எத்தனை லடச ரூபாய் பாாப்பான கொள்ளை அடிக்கபபோகிறான என்பதை சிந்தித்துப பாருஙகள

## அம்மை, காலராவுக்குப் பலியாவதோ?

இவை ஒரு பக்கம இருப்பதோடு, கூடட நெருககடியில் உயிாசசேதம எவ்வளவு, திருடடு எவவளவு, இவை தவிர இபபொழுதே அங்கு - கும்பகோணததில் - காலராவும, அமமையும் வந்துவிடட்து இதறகாக கொடடகைக் கடடி அங்கு கட்டிலும் படுக்கையும போட்டாகிவிடடது பிளேக குககும கொட்டகைபோடடாகிவிடடது அதுவும தான் தன பாபததைத தீர்ததுக்கொளள அங்கு வரப்போகின்றது சுடுகாடடுககாக 10 ஏக்கா நிலம ஒதுககி வைதது சில குழிகளும தயாராய் முனிசிபாலிடடியார் வெட்டி வைததிருககிறார்கள்

கும்பகோணததுக் கொசுககளோ அநத ஊா பாாப் பனர்களையும், குச்சிக்காரிகளையும்விட எத்தனையோ பஙகு மோசமானவைகள என்று சொலலலாம் ஏனெனில் இது அவாகளைவிட மோசமாக வெளியில் இருநது வரு கின்றவர்களின் இரத்ததை உறிஞசக் காத்துககொண்டு இருககினறது மாமாஙகத்துககு போய் வந்தவனுககு வரப போகினற மலேரியாகாய்ச்சல் அடுத்த மாமாங்கம வந்தாலொழிய தீராது இந்த நிலையில உளள மகாமகம எனன புணணியத்தைக கொடுககும் என்பதை நீங்களே சிநதிததுப பாருஙகள

*(12 2 1933-"குடி அரசு' இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம் )*

## தண்ணீரில் குளித்தால் பாபம் தொலையுமா?

குமபகோணத்தில மகாமக உற்சவம் நடககபபோகிறது அதறகு திராவிட மககளை வருமபடியாக குமபகோணம் பாாபபனர்களால அழைப்புக்குமேல அழைபபு விடுதத வண்ணமாக விளமபரங்கள் காணபபடுகினறன

பாாபபனப பததிரிககைகள் மாமாங்சததைபபற்றி பிரமாதபபடுததி மககளை அங்கு சோபபிக்க-தள்ளிவிட-முயறசிக்கினறன

இநத 20-ஆவது நூற்றாண்டுக்குப் பக்கததில் வாழும திராவிட மககள இபபடி ஒரு அறிவும், மானமும் சூனயமான ஒரு உறசவத்தை மதித்து குமபகோணம சென்று கூமடடைகள் ஆவதெனறால் இதை உலகின 8-ஆவது அதிசயமெனறுதான சொலலவேணடும

குமபகோணததில் இவ்வளவு கூட்டம் சோககபபடு வதற்கு மாமாஙகததன்று அங்கு என்ன புதிய சங்கதி காணபபடப்போகிறது என்பதை யோசிப்போம

அங்குளள மாமாங்கக் குளம என்பது வெகுநாளாக இருநது வருவதேயாகும அதில் உள்ள தண்ணீரும் வெகுநாளாக இருநதுவருவதேயாகும அப்படி இருக்க அனறு (மக நடசததிரததன்று) மாத்திரம் அக்குளததிறகும தணணீருககும் எபபடிப புது யோக்கியதையோ பெருமையோ உணடாகிவிடும என்பதை அறிவுளள மனிதன யோசித்துப பாாகக வேண்டாமா?

தமிழனின மதிானததை கைமுதலாக வைதது வாழும பாாப்பனா கூடடம தஙகள வாழ்க்கைககும வயிறறுப பிழைப்புக்குமாக எதைக கற்பிததாலும், தமிழன அதறகு அடிமையாவதென்பது இழிவான காரியமலலவா?

## பார்ப்பனர் கட்டிய கதை

கும்பகோண மாமாங்கததிறகு பாா்பபனா ஏறபடுத்தி இருககும கதை எனனவெனபது எவரும அறியாததலல

அதாவது "சப்த நதிகளும் சிவனிடம சென்று உலக மக்கள் தஙகள தஙகள் பாவத்தைக கழிபபதற்கு ஆக தஙகளிடம் வந்து குளிதது முழுகிப் பாவஙகளை கழுவி விட்டுககொண்டே இருப்பதால் அப்பாவங்கள் தஙகளால் சுமகக முடியவிலலை" என்று அழுதாா்கள

அதற்கு சிவன், அநநதிகளைத தேறறி "12 வருஷததிறகு ஒருமுறை கும்பகோணததிற்கு வந்து அங்குளள ஒரு குளததில் ஒரு தீா்ததததை உறபததி செயகிறேன அககுளததிறகு வநது நீஙகள குளிததால் உஙகளின் பாபஙகள அதில கழுவபபட்டுப போககும" என்று சொன்னாா் அதறகு ஆக அநத நதிகள அஙகுவநது குளிதது தஙகள மீதுள்ள பாவஙகளை அதில கழுவி விடுகின்றன ஆதலால, மனிதாகளும அன்று வநது அதில குளித்தால

அமமனிதாகளின் பாபமும் அங்கு கழுவப்பட்டுவிடும் என்பது புராணக்கதை

இதுதான மாமாங்கக் கதையின் சுருககம்

இதை எந்த மனிதனாவது நம்ப முடியுமா? மனிதன உயாந்த ஜீவப்பிராணி என்பதற்குக காரணம அவனுக்கு உள்ள ஆறாவது (பகுத்தறியும்) அறிவேயாகும

அதாவது சிந்தித்துப் பார்க்கும தன்மையேயாகும் அப்படிப்பட்ட ஆறாவது அறிவுப்படி பாாத்தால் இநத மாமாங்கக்கதையை எந்த மனிதனாவது நம்ப முடியுமா என்று கேட்கின்றோம்

## நதியில் குளித்தால் பாபம் போகுமா?

ஒரு நதியில ஒரு மனிதன் குளித்த மாததிரததில் அவனது பாவம் அதில கழுவப்பட்டுப்போகும் (தொலையும்) என்பது எப்படி அறிவுககுப பொருநதும என்பதும, அந்த நதி அந்தப் பாவத்தை சுமககாமல் சிவனிடம சென்று அழுவது என்பதும், அதற்கு ஆக (அநத நதிகளின் பாவபாரம் குறைவதற்கு ஆக) வேறு குளத்தை கடவுள் சிருஷ்டிக்கிறது என்பதும், அநதககுளததிறகு இந்த (ஏழு) நதிகள் வருவது எனபதும் ஆகிய சஙகதிகள மனிதர் களுககுச் சொலலக்கூடியவைகளா? அல்லது மடையர்கள், மனிததன்மை அற்ற, மனித உருக்கொணட மிருகங் களுககும் மரஞுசெடிகளுக்கும் சொல்லக்கூடிய கதையா என று வாசகர்களை சிநதித்துபபாாகக வேண்டுகிறோம

12 வருடத்திற்கு ஒரு முறை அந்தக் குளத்தில் நீா பொங்கி வ்ருவதாக நேரில் பார்த்ததாகவே சிலர் கூறுகிறார்கள்

தண்ணீரை நெருப்பில் வைத்துக் காய்ச்சினாலல்லாது, பொங்குகிற வஸ்துவை போட்டாலல்லாது தண்ணீர்

எபபடிப் பொஙக முடியும்? மாமாங்கத் தினத்தன்று தணணீா குளததில விடடுவைதத அளவுக்குமேல் அதிகமாகக காணபபடுவதாக சில பாாபபனாகள கதைககட்டிவிடுகிறார்கள

மக்களைத தண்ணீருககுள் இறங்கவிடாமல தடுதது நிறுததி பிறகு தணணீரைப் பார்ததால அப்போது அது பொஙகுகிறதா இல்லையா என்பதின் உணமை கண்டு பிடிகக முடியும அபபடிககில்லாமல் பதினாயிரககணக் கான மக்களை குளிககவிட்டு அதன்பிறகு தண்ணீா அதிகமாகி இருககிறது என்று சொன்னால் அதை எப்படி தணணீா எனறே சொல்லமுடியும்?

குளிககபபோகும மக்கள் அநதக குளிரில தஙகள் சிறுநீரைக் கழிக்க அநதக்கூட்டத்தில குளக்கரையில எஙகு இடம் காணமுடியும?

ஆதலால குளிக்கிறவாகள அவசர அவசரமாகத் தண்ணீரில் இறஙகி அஙகு நீர்கழிகக ஏற்பட்டு விடுவதன் மூலம குளததின் தணணீர் பெருகி இருககலாம்

அந்த சிறுநீரின் தனமையால குளததில் குமிழிகள் காணபபடலாம

## குளம் தன் பாபத்தை எங்கு கழுவும்?

அன்றியும மககள் ஏராளமாக தண்ணீரில் இறங்குவதா-லும் தணணீரில உயர்ந்து இருககலாம்

இந்தமாதிரி காரணஙகளால் தண்ணீர் மட்டம 4, 2 படிககட்டுகளுககு உயர்ந்துவிட்டால, அதைப பொஙகிற்று என்று சொல்லுவது அறிவுடைமையாகுமா என்று கேட்கிறோம.

அன்றியும சபத நதிகளுககுமே தங்களிடம மக்கள் கழுவி விடட பாபம தாங்காமல அங்கு (மாமாங்கக்குளததிறகு) வநது குளிதது பாவங்களை கழுவி விடடுவிடடுபபோக வேணடிய அவசியம வந்ததென்றால பிறகு இநத நதிகள கழுவிவிடட பாபததை இந்த மாமாங்ககுளம கழுவிவிடவே எநதககுளததிறகு வருஷத்திறகு வருஷம், அல்லது 12 வருஷததிறகு ஒரு தரமாவது அது சென்று வநதது என று கேடகினறோம

ஆகவே, "எததனையோ காலமாக எத்தனையோ போ கழுவிவிடட பாபஙகளைக கொணடுவநது கழுவிவிடட" மாமாங்கக்குளப பாவத தணணீரில மனிதன போய குளிபபதனால அவனுககு பாபம ஏறுமா? அல்லது கழியுமா? எனறு அறிவுடைய மககள யோசிக்க வேணடாமா என்று கேடகினறோம

எனவே, இநத மாமாஙகபபுரட்டு பாாப்பனாகள பிழைக்க ஏறபடுததிக்கொணட ஒரு சுஙககசசாவடி கடடுக கதை அலலாமல் இதில் ஏதாவது நாணயமோ உணமையோ அறிவுடைமையோ இருகக இடமிருககிறதா?

இதற்கும பாாபபனப பததிரிகைகை உடையவும, காஙகிரஸகாரர்களுடையவும விளமபரம ஒருபுறமிருகக, காஙகிரஸ்காராகள் அதைத் தஙகள பிரசசாரததிறகுப பயனபடுததிககொள்ளச் செயயும் சூழசசி ஒருபுறம் இருகக, ரயில்வேககாரருடைய விளமபரம வேறு ஒரு பககம இருநதுவருகிறது

இந்த வருஷம மாத்திரம "சணடை நெருககடி காரணமாக ரயில் விடமுடியாது எனறு சொலலு கிறாாகள எனறாலும அந்த விளமபரததின மூலம மககளுக்கு மாமாஙகத்தை ஞாபகபபடுத்திக்கொணடுதான வருகிறாாகள

ரயிலுககு எபபடியும சௌற மாமாஙகததிறகு கிடைத்த வருமபடிக்குத குன்றயா மல் வருமபடி கிடைக்கத்தான போகிறது

ரயில்வே சிப்பந்தி பார்ப்பனர்களுக்கும் 'பிரைஸ்' அடிக்கத்தான் போகிறது.

மற்றும் பார்ப்பனர்களுக்கு காப்பிக்கடை, ஓட்டல், தங்குமிடவசதி, பாட்டுக்கச்சேரி சினிமா முதலிய காரியங்களாலும் தர்ப்பணம் சங்கல்பம் முதலியவைகளாலும் மற்றும் பல சிலகாரச் சிற்றின்பக்காரியங்களாலும் இரும்பு, நூல் ஜவுளி வியாபாரிகள் அடித்த கொள்ளை லாபத்தைப் போல லாபம் கிடைக்கத்தான போகிறது

கடைசியில் கெட்டு நட்டமடைந்து இழிவடைந்த முட்டாள்களாக திராவிட மக்கள்தான ஆகப்போகிறார்கள்

## மனைவி மக்கள் இடிபடவா?

மற்றும் தன் மனைவி மக்களை ஒரு மீட்டிங்கிற்கும், கான்பரன்சுக்கும் அனுபபக்கூட பயந்து நடுங்கியவனும், உறைபோட்டு அறைக்குள பூட்டி வைத்து பூட்டை இழுத்து இழுத்துப் பார்த்துவிட்டு வெளியில் போய் வருகிறவனும் கூட தன மனைவி மக்களை மாமாஙகத்திற்குக கூட்டிக் கொண்டு போய் கூட்டத்தில் சிக்கவைத்து நசுங்குணடு பஞ்சாமிர்தம போல ஆவதைப்பாரதது "கழுத்து பத்திரம், காது பாத்திரம்" என றுமாத்திரம உரததுககூறிக்கொணடு இழுதது வரபபோகிறான் எனபதைத்தவிர மாமாங்கத்தின முடிவு வேறு எனனமாக இருக்க முடியும?

இந்த சாக்கார் மனுதர்ம. புராண ஆட்சி சாக்காராய இல்லாமல் இருக்குமானால் இபபடிப்பட்ட முட்டாள்தனமான காரியஙகளுக்கு மக்களை ஆளாக்காமல் மாமாஙகம் நடத்தக்கூடாது என்று 144 உத்தரவு போட்டு அதறகு பதிலாக ஒரு உலகக கண்காட்சியை நடத்தச்செய்து இருக்கும் "மககள் மடமையாய் இருககும்வரை அரசருக்கும ஆரியருககும ஆதாயம்" எனகிறது சாணக்கிய கொளகை. ஆதலால அறிவு வளாசசிககுச சாக்கார் தககது செய்யாமல் மாமாங்கம் முதலியவைகளுககு ஆதரவளிதது வருகிறது

எபபடி இருந்தாலும இநத மாமாஙகததிறகு திராவிடர் மக்கள சிறப்பாக தமிழமக்கள செல்லாமல் அதை வெறுததுத் தள்ளி போகிறவர்களுக்கும் விவரம் சொல்லி எவரையும போகாமல் தடுத்துவிட வேண்டுமாய் வேண்டிககொளளுகிறோம

மாமாஙகக்கதையை நமபுவது கேடு! மதிகேடு!" மதி கே.டு!" என்று சொல்லுவதோடு, அஙகு செலலுவதும தமிழ் மகனுககு (திராவிடனுககு) மானக்கேடு' மானக்கேடு!" மானக்கேடு!'" என று பலதடவை சொல்லுவோம

(17 2 1945 "குடிஅரசு இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)

அச்சிட்டோர்.

'விடுத்லை' ஆஃப்செட்-பிரிண்டாஸ்,

50, ஈ வெ கி.சம்பத் சாலை வேப்பேரி, சென்னை - 600 007.

# இதுதான் மகாமகம்!



T187
R004

தந்தை பெரியார்

*(1935 மற்றும் 1945-ல் எழுதியது)*

-திராவிடர் கழக வெளியீடு, நன்கோடை - 150 காசுகள்